**தேதி:- 01.02.2020 அசல் வழக்கு எண்.148/2010 வா.சா.2 (சந்திரன்)**

**குறுக்கு விசாரணை :- (18 முதல் 22, 25 முதல் 27 பிரதிவாதிகள் தரப்பில்)**

நான் 1 ஆம் வாதியின் கணவர். வழக்குப் பற்றிய விபரங்கள் ஓரளவு தெரியும். தாவாச் சொத்துக்கள 1, 2 வாதிகளின் பூர்வீகச் சொத்துக்கள். 7 லக்கச் சொத்துக்களுக்கு தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவாச் சொத்துக்கள் மதிப்பானச் சொத்துக்கள் என்றால் சரிதான். என் மாமனார் நல்லவசதியானவரா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. தாவாச் சொத்துக்கள் என்மாமனாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதால்தான் வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியும். அதிலுள்ள விபரங்கள் சரியானவைதான். 1 ஆம் வாதிக்கு என் மாமனார் வா.சா.ஆ.18 தான் செட்டில்மெண்டு பத்திரத்தை எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பி.சா.ஆ 1 பாகபத்திரம் ஆறுமுகம்பிள்ளை, வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்குள் ஏற்பட்ட ஆவணம் அது 1 முதல் 3 பிரதிவாதிகளால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம். அதில் ஆறுமுகம்பிள்ளை, அவரது பெண்பிள்ளையான சின்னப்பொண்ணு என்ற நாகரெத்தினம் ஆகிய இருவரும் கையொப்பம் இடவில்லை. பி.சா.ஆ 1 குறித்து போலிசில் புகார் கொடுக்கவில்லை. அதில் ஆறுமுகம்பிள்ளையும், அவரது வாரிசுகள் அனைவரும் கையொப்பம் இட்டதால்தான் நான் போலிசில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1 ஆம் வாதி தன் மகன்களான 3,4 வாதிகளுக்கு வா.சா.ஆ.9 படி செட்டில்மெண்டு எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அதில் 1 ஆம் லக்கச் சொத்து குறித்துத் தெரியும். அதன் புலஎண்.16/5 என்றும், அதன் விஸ்தீரணம் 6.66 செண்ட் என்றும் சொன்னால் சரிதான். அதில் 2 ஆம்லக்கச் சொத்தான ரீசர்வே எண்.17/4 என்றும், விஸ்தீரணம் 8.83 செண்ட் என்றும் சொன்னால் சரிதான். அதில் 3 ஆம் லக்கச் சொத்தின் ரீசர்வே எண்.22/2 விஸ்தீரணம் 5.33 செண்ட் என்றும் சொன்னால் தவறு. சாட்சி மீணடும் பத்திரத்தை படித்துப் பார்த்துவிட்டு 3 ஆம்லக்கச் சொத்தின் புலஎண்.22/2 என்றும் அதன்விஸ்தீரணம் 5.33 செண்ட் என்றும் மாற்றிக் கூறுகிறார். வா.சா.ஆ.9 படி 1 ஆம் வாதி மொத்தவிஸ்தீரணதத்தில் பிரிவினையில்லாத 1 ஆம் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து குறித்து 3,4 வாதிகள் பெயரில் எழுதி வைத்துள்ளார். பிரிக்கப்படாத சொத்து குறித்து ஒரு நபர் சட்டப்படி செட்டில்மெண்டு எழுதிவைக்க முடியுமாஎன்றால் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.9

தேதியிலேயே 2 ஆம் வாதி தனது கணவரான 5 ஆம் வாதிக்கு அதே புலஎண்களில் தனக்குப் பாத்தியப்பட்ட பிரிவினையில்லாத 1/6 பங்கு குறித்து வா.சா.ஆ.17 ன்படி செட்டில்மெண்டு எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 மற்றும் 17 இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எழுதப்பட்டன. வா.சா.ஆ.9 மற்றும் 17 ல் சொல்லப்பட்டுள்ள 1 முதல் 3 லக்கச் சொத்துக்கள்தான் இந்த வழக்கிலும் 1 முதல் 3 சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளன என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ல் உள்ள 3 ஆம்லக்கச் சொத்தை தான் 1,3,4 வாதிகள் இந்த வழக்கின் 23 ஆம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.35 படி கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அது 09.04.2012 ல் கிரையம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அன்றே வா.சாஆ.17 பத்திரத்திலுள்ள 3 ஆம் லக்கச் சொத்தை அதாவது தாவா 2 ஆம் லக்கச் சொத்தை வா.சா.ஆ.36 படி 23 ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.37 படி 1 முதல் 5 வாதிகள் மற்றும் 3 ஆம் பிரதிவாதியும் அவரது வாரிசுகளும் மற்றும் இறந்து போன சின்னப்பொண்ணு என்ற நாகரெத்தினம் என்பவரும் சேர்ந்து அவர்களுக்குண்டான பிரிவினையில்லாத சொத்து குறித்து அதாவது 5/6 பாகம் குறித்து ஒரு R.முத்துராமலிங்கம் என்பவருக்கு வா.சா.ஆ.37 படி 23.12.2016 ல் கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். என் நிரூபணவாக்குமூலத்தில் 20 முதல் 30 பத்திகளில் உள்ள சங்கதிகள் திருத்தப்பட்ட வழக்குரையில் சொல்லப்படாதவை என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. 1 ஆம் பிரதிவாதியின் வாரிசுகளும், 2,3 பிரதிவாதிகளும் அவரது வாரிசுகளும் முழுச்சொத்தையும் விற்றுவிட்டார்கள் அதனால் அந்தக்கிரையம் செல்லாது, வாதிகள் விற்ற கிரையம் செல்லுமா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. 18 முதல் 22 பிரதிவாதிகள் பெற்ற கிரையம் செல்லாது என்று வாதிகள் பரிகாரம் கேட்டுள்ளார்களா என்றால் கேட்டுள்ளார்கள். அவ்வாறு எந்தவிதப் பரிகாரமும் கேட்கவில்லை என்றும் நான் தவறாக சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 18 முதல் 22 பிரதிவாதிகள் உண்மையான உரிமையாளர்களிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார்கள் எனறால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள வருவாய்துறை ஆவணங்கள் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 9 மற்றும் வா.சா.ஆ.17 செட்டில்மெண்டு பத்திரங்கள் எழுதிக் கொடுத்த 1,2 வாதிகள் 23

மற்றும் 24 ஆம் பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கிரையப்பத்திரத்திரங்களிலும் 1,2 வாதிகள் கையொப்பம் இட்டுள்ளார்கள் என்றால் சரிதான். 24 ஆம்பிரதிவாதிக்கு நாங்கள் எழுதிக் கொடுக்கவில்லை. 1,2 வாதிகள் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தபிறகு செட்டில்மெண்டை எழுதி வாங்கிய நபர்கள் செய்த கிரையத்தில் 1,2 வாதிகள் ஏன் கையொப்பமிட்டார்கள் என்றால் எனக்குத் தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். 03.09.2000 ல் புலஎண்.15/7 ல் 1,2 வாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட தலா 3 செண்டிற்கு தலா 1 செண்டிற்கு ரூ.9,000 வீதம் 3 செண்டிற்கு தலா ரூ.27,000 1,2 வாதிகள்குக் ஆறுமுகம்பிள்ளை கொடுத்துள்ளார் என்றாால் சரியல்ல. அதற்கு ஒப்பந்தப்பத்திரத்தில் 1, 2 வாதிகள் கையொப்பமிட்டுள்ளார்கள் எனறால் சரியல்ல. ஆறுமுகம்பிள்ளை உயிருடன் இருககும் போதே பாகம் பிரித்து தன் பெண்பிளளைகளுக்கும் பாகம் கொடுத்துவிட்டார் என்றால்சரியல்ல. பெண்பிள்ளைகளுக்கு பாகம் கொடுத்ததால்தான் ஆறுமுகம்பிள்ளையின் மகளான சின்னப்பொண்ணு என்ற நாகரெத்தினம் வாதிகளில் ஒருவராக சேரவில்லை என்றால் தவறு. அவர் உயிருடன் இருககும் வரையில் எங்களுடன் சேரவில்லை என்பதால்தான் அவர் இறந்த பிறகு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சின்னப்பொண்ணு என்ற நாகரெத்தினத்தின் வாரிசுகளை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளோம். சின்னப்பொண்ணு என்ற நாகரெத்தினத்தின் வாரிசுகள் தங்களது தாயார் அவரது தகப்பனாரிடமிருந்து பாகத்தை பெற்றுக் கொண்டதால்தான் எங்களுடன் சேர்ந்து அவர்கள் வழக்காடவில்லை என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. என் தூண்டுதலின்பேரில்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 18 முதல் 22 பிரதிவாதிகளிடம் பணம் பறிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. ஆகவே தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.